# இளைஞர்களின் எதிர்காலத்தை உறுதி செய்யும் அமைப்பு - தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்!

## சென்னை நந்தனம் புதிய அலுவலகத் திறப்பு விழாவில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, பிப்.18-**

**சென்னை, நந்தனம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக புதிய அலுவலகத் திறப்பு விழா நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு புதிய அலுவலகத்தை இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து உரையாற்றுகையில், "இளை ஞர்களின் எதிர்காலத்தை உறுதி செய்யும் அமைப்பு - தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்" என்று குறிப்பிட்டார்.**




அப்போது அவர் பேசியதாவது:

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்காக ரூபாய் ரூ.8 கோடியே 78 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அலுவலகத்தைத் திறந்து வைப்பது, மாவட்ட அளவிலான திறன் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ஒன்றிய அளவிலான திறன் பயிற்சிகளைத் தொடங்கி வைப்பது, `நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் திறன் பயிற்சி பெற்றவர்களுக்குப் பணி நியமன கடிதங்கள் வழங்குவது, இளநிலைப் பட்டப்படிப்பு படிக்கின்ற மாணவர்களுக்கு இங்கிலாந்தின் துர்காம் பல்கலைக்கழகம் மூலம் நூறு மணி நேர அளவிற்கு 'ஆர்டிபீசியல் இன்டலிஜென்ட்ஸ்' வகுப்புகளை நடத்த தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் இடையே புரிந்துணர்வு (எம்.ஓ.யு) ஒப்பந்தம் கையெழுத்திடுவது, ஸ்கில் டிரெய்னிங், இன்டர்ன்ஷிப் டிரெய்னிங் போன்றவற்றை வழங்குவதற்காக டெக் மகேந்திரா, ஆரக்கிள் போன்ற நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது என்று இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

**'மக்களுடன் முதல்வர்' என்ற திட்டமும் 3.5 லட்சம் பயனாளிகளும்!**

இந்த நிகழ்ச்சிக்கு முன்பு நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் `மக்களுடன் முதல்வர்' என்ற திட்டத்தை, சென்ற மாதம் தொடங்கி வைத்து இன்றைக்கு, கிட்டத்தட்ட முதல்வரின் கைகளால் அனைத்து மாவட்டங்களிலும் 3 லட்சத்து 50 ஆயிரம் பயனாளிகளுக்கு அந்தப் பணிகளை நடத்திக் கொடுத்திருக்கிறார். இரண்டு நாட்களுக்கு முன்புதான் இதே துறை நம் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் சார்பாக, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள், மாணவர்கள், மாணவிகள் பயன்பெறுகிற வகையில், ஒரு சிறப்பான நிகழ்ச்சியை கலைவாணர் அரங்கத்தில் நடத்தி முடித்தோம். இன்றைக்கு மீண்டும் இந்தத் துறையின் சார்பாக நடக்கின்ற இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். இதன் மூலம் நம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் எவ்வளவு துடிப்பாக, எவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதற்கு இந்த நிகழ்ச்சியே ஒரு அடையாளம். இளைஞர்களின் மீது கழக அரசு கொண்டிருக்கும் அக்கறையின் சாட்சி! மூன்று நாட்களில் இந்தத் துறையின் சார்பாக, இரண்டு நல்ல நிகழ்ச்சி கள். நம் இளைஞர்களின் மீது கழக அரசு கொண்டிருக்கக்கூடிய அக்கறையின் சாட்சியாகத்தான் குறுகிய இடைவேளையில் தொடர்ந்து இதுபோன்ற நிகழ்ச்சிகளை நாம் இங்கே நடத்திக் கொண்டிருக்கிறோம்.

நம் திராவிட மாடல் அரசின் 33 மாத காலச் சாதனைகளை, நம் முதலமைச்சர் அவர்கள் நேற்று சட்டப் பேரவையில் மிகுந்த பெருமையுடன் எடுத்துச் சொன்னார்கள். அதில் முக்கியமாக 10 திட்டங்களை எடுத்துரைத்தார்கள், நம் முதலமைச்சர் அவர்கள். ஒவ்வொன்றையும் முதல் திட்டம், இரண்டாவது திட்டம் என்று கூறி சட்டமன்றத்தில் நேற்று பேசினார்கள். அதில் நம் துறை செயல்படுத்துகின்ற இந்த `நான் முதல்வன் திட்டம்' பற்றியும் பெருமையாகப் பேசியிருக்கிறார்கள். அதாவது, இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு இரண்டே வருடத்தில் இதன் மூலம் 25 லட்சம் இளைஞர்கள், மாணவர்கள், மாணவிகள் பயன்பெற்றிருக்கிறார்கள் என்று, நம் முதலமைச்சர் அவர்கள் மிகப் பெருமையாகக் கூறினார்கள். அதைக் கேட்கும்போது நம் அத்தனைப் பேருக்கும் உள்ளபடியே மிகப்பெரிய ஒரு மகிழ்ச்சி, பெருமை. இன்னும் பல லட்சம் இளைஞர்கள் இந்தத் திட்டத்தால் பயனடையும் வகையில், நாம் செயலாற்ற வேண்டும் என்றுதான் முதலமைச்சர் அவர்கள் நம்மைப் பாராட்டியிருக்கிறார்கள். எதிர்காலத்தை உறுதி செய்கின்ற அமைப்புஇத்தகைய சாதனைகளைப் படைத்து வரும் நம் திறன் மேம்பாட்டுக் கழகத்தின் அதிகாரிகள், அலுவலர்கள் என உங்கள் அத்தனைப் பேருக்கும் என்னுடைய பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் தமிழ்நாட்டு மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் சிறப்பான எதிர்காலத்தை உறுதி செய்கிற அமைப்பாக, நம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வெகு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

குறிப்பாக ஏழை, எளிய, கிராமப்புற இளைஞர்கள், இளம் பெண்களுக்குத் திறன் பயிற்சிகள் வழங்கி, அவர்களுக்கான வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதில், நம் திறன் மேம்பாட்டுக் கழகம் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வந்து கொண்டிருக்கிறது.

2022ஆம் ஆண்டில் நம் தமிழ்நாட்டுப் பிள்ளைகள் சர்வதேச அளவில் கல்வி அறிவைப் பெறுவதற்கும், வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கான திறன்களைப் பெறவும் 'நான் முதல்வன்' திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் இரண்டு வருடத்திற்கு முன் அவரின் பிறந்தநாள் மார்ச் 1ஆம் தேதி தொடங்கி வைத்தார்கள்.

**பறந்து, விரிந்து சிறப்பாகச் சேவையாற்றி வருகிறது!**

மாணவர்களின் உயர் கல்விக்கு வழிகாட்டுதல்களை வழங்குவதில் தொடங்கி, போட்டித் தேர்வுக்கு எனத் தனிப்பிரிவு, தமிழ்நாடு திறன் போட்டிகள் பிரிவு என்று `நான் முதல்வன் திட்டம்' பரந்து, விரிந்து சிறப்பாகச் சேவையாற்றி வருகிறது. இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட ஒரே ஆண்டில் 13 லட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் பயனடைந்துள்ளார்கள். அதற்கு அடுத்த ஆண்டில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, அரசுத் தொழில்நுட்ப நிலைய மாணவர்கள் உட்பட 14 லட்சத்து 68 ஆயிரம் மாணவர்கள் இந்த 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் பயன்பெற்றுள்ளார்கள்.

2022ஆம் ஆண்டில் நடைபெற்ற சர்வதேச உலக அளவிலான உலகத் திறன் போட்டியில் (World Skill Competition) கலந்துகொண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று போட்டியாளர்கள் பதக்கம் வென்று, நம் தமிழ்நாட்டிற்கு மிகப்பெரிய பெருமையைத் தேடித் தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நேரத்தில் நம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**இந்திய ஒன்றியத்திலேயே நம்பர் ஒன் முதலமைச்சர்!**

இந்திய ஒன்றியத்திலேயே நம்பர் ஒன் முதலமைச்சராக இருக்கக்கூடிய நம் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டு இளைஞர்கள் ஒவ்வொருவரையும் அவரவர் துறையில் `நான் முதல்வன்' என்று சொல்ல வைக்கிற வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 'நான் முதல்வன்' வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்று கடந்த ஆண்டு ஒரு லட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் பணி வாய்ப்புகளைப் பெற்றார்கள். இந்த ஆண்டிற்கான வேலைவாய்ப்பு முகாம்கள் தற்போது படிப்படியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனை மாணவர்கள், இளைஞர்கள் சிறப்பான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதுவரை முதல் கட்டமாக நடந்த முகாம்களில் 4,500 கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள் இறுதியாண்டு படிக்கும்போதே முன்னணி நிறுவனங்களின் மூலம் பணி நியமன ஆணைகளைக் கொடுத்திருக்கிறோம்.

**2,400 பொறியியல் மாணவர்களுக்கும் பணி நியமன ஆணைகள்!**

அதேபோல், 2,400 பொறியியல் மாணவர்களுக்கும் பணி நியமன ஆணைகளைக் கொடுத்திருக்கிறோம். ஆண்டு வருமானம் குறைந்தது ரூ. 2 லட்சத்தில் தொடங்கி 40 லட்சம் வரை கிடைக்க நம் 'நான் முதல்வன்' வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் நம் மாணவர்களுக்கு அந்த வேலைவாய்ப்புகள் கிடைத்துள்ளன என்பதை இங்கே மீண்டும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் பணிகளை இன்னும் வேகமாக, சிறப்பாக மேற்கொள்ள ஏதுவாகத்தான் இன்றைக்கு இந்தப் புதிய தலைமை அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு, சென்னை கிண்டி திரு.வி.க தொழிற்பேட்டையில் இருந்த அலுவலகம் கொஞ்சம் சிறிய அளவில் இருந்தது.

இந்தப் புதிய அலுவலகம் கிட்டத்தட்ட 32 ஆயிரம் சதுரடி பரப்பளவில் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் அதிகாரிகள், அலுவலர்கள், பணியாளர்கள் உற்சாகத்துடன் பணியாற்றும் வகையில் பணியிடச் சூழல் அமைக்கப்பட்டுள்ளது. போதுமான இட வசதி, பாதுகாப்பு அம்சங்கள், தங்கு தடையற்ற மின்சாரம் மற்றும் இணைய வசதி, வாகன நிறுத்தம் ஆகியவற்றை மனதில் கொண்டு இந்தப் புதிய தலைமை அலுவலகம் இன்று உங்களுக்காகத் திறக்கப்பட்டுள்ளது.

**திறன் சார்ந்த இளைஞர்களின் எண்ணிக்கை!**

உயர்த்த இதுவே அடித்தளம்நான் இந்த அலுவலகத்திற்கு முதல்முறை வருகிறேன். இந்த அலுவலகம் கிட்டத்தட்ட ஒரு அரசு அலுவலகம் போல் இல்லாமல், ஒரு ஐந்து நட்சத்திர, ஏழு நட்சத்திர ஹோட்டல் மாதிரி இருக்கிறது. நான் துறை அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்வது, இங்கு இனிமேல் இந்த அரங்கத்தில் அடிக்கடி நிறைய நிகழ்ச்சிகள் இந்தத் துறையின் சார்பாக நிறைய நலத்திட்ட உதவிகள் நடத்த வேண்டும். அதற்கு என்னை நீங்கள் அழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உங்கள் பணிகள் சிறக்க, இந்தத் துறையின் அதிகாரிகள் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, நம் மாணவர்கள் நவீனத் தொழில்நுட்பங்களைக் கற்க வேண்டும் என்ற இலட்சியத்தோடு `பிரிட்டிஷ் கவுன்சில்' உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் இங்கே கையெழுத்திடப்பட்டுள்ளது. இதன் மூலம் `ஆர்டிபீசியல் இன்டெலிஜென்ஸ்' சார்ந்த கல்வியை இங்கிலாந்தின் துர்காம் பல்கலைக்கழகம் மூலம் 25 கல்லூரி மாணவர்கள் பெற உள்ளனர்.

இதன் மூலம் புகழ்பெற்ற டெக் மகேந்திரா, ஆரக்கிள் நிறுவனங்களோடும் இன்றைக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பம் இடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் வேலைவாய்ப்பைப் பெருக்கவும், திறன் சார்ந்த இளைஞர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நிச்சயம் ஓர் அடித்தளமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

திறன் பயிற்சி பெறவுள்ள இளைஞர்கள், பணி நியமனக் கடிதங்களைப் பெறவுள்ளவர்கள் என அனைவருக்கும் என்னுடைய அன்பையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலங்களில் செயல்படுத்திய திறன் மேம்பாட்டு திட்டங்களையும் தாண்டி புதிய முன்னெடுப்புகளின் மூலம் நம் இளைஞர்களை இன்னும் பல உயரங்களுக்கு அழைத்துச் செல்ல நம் கழக அரசு என்றைக்கும் உங்களுக்குத் துணை நிற்கும் என்ற அந்த உறுதியை இந்த நேரத்தில உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் அரசின், நம் முதலமைச்சரின் பிராண்ட் அம்பாசிடர்ஸ், இந்த அரசின் தூதுவர்கள் பயனாளிகளாகிய நீங்கள் தான். இந்த அரசின் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்லுங்கள். இன்னும் நிறைய பேர் இந்தத் திட்டத்தினால் பயனடைவதற்கு நீங்கள் ஒரு தூண்டுகோலாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு வந்திருந்த உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய வணக்கத்தையும் வாழ்த்துகளையும் தெரிவித்து, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறையின் செயலாளர் தாரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் இன்னசென்ட் திவ்யா, நான் முதல்வன் திட்டத்தின் தலைமை செயல் இயக்குநர் ஜெயபிரகாசம், நான் முதல்வன் திட்ட இயக்குநர் சுதாகரன், சென்னை மெட்ரோ ரெயில் லிமிடெட் நிறுவன மேலாண்மை இயக்குநர் மு.அ.சித்திக், பிரிட்டிஷ் கவுன்சில் துணை ஆணையர் ஆலிவர் பால் ஹாட்சட், உட்பட அரசு அதிகாரிகள், அரசு அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## திருப்பூர் மாவட்ட 'முரசொலி' நிருபர் க.பழனியப்பன் இல்லத் திருமண விழா !

### அமைச்சர்கள் - மாவட்டச் செயலாளர்கள் - கழக முன்னோடிகள் பங்கேற்பு!

திருப்பூர், பிப்.18-

திருப்பூர் மாவட்ட முரசொலி நிருபர், திருப்பூர் வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி முன்னாள் ஒருங்கிணைப்பாளர் க.பழனியப்பன் இல்லத் திருமண விழாவில் அமைச்சர் பெருமக்கள், மாவட்டச் செயலாளர்கள், கழக உடன்பிறப்புக்கள் பெருந்திரளாக பங்கேற்று விழாவினை சிறப்பிக்க உள்ளனர்.

தமிழினத்தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், கழக இளைஞர் அணி செயலாளர்,



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக துணை பொதுச் செயலாளர், நாடாளுமன்ற கழகக் குழுத் துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன் திருப்பூர் மாவட்ட முரசொலி நிருபர், திருப்பூர் வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி முன்னாள் ஒருங்கிணைப்பாளர் க.பழனியப்பன் ப.கமலக்கண்ணா ஆகியோரின் திருமகள் ப. முத்துமீனாட்சி, கோவை பொ.முருகேசன் மு.தனலட்சுமி ஆகியோரின் திருமகன் மு.தீபக் ஆகியோரது திருமண வரவேற்பு விழா இன்று (18.02.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 06.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை திருப்பூர், காங்கயம் சாலை, படியூர் S.P.அலமேலு மங்கை திருமண மண்டபத்தில் வரவேற்புவிழா நடைபெறுகிறது. இவர்களது திருமண நாளை (19.02.2024 திங்கட்கிழமை) காலை 06.00 மணிக்கு மேல் 07.15 மணிக்குள் அதே மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், மாவட்டக் கழக செயலாளர்கள், மாநில நிர்வாகிகள்,

மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,

அரசியல் கட்சித் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புக்களின் இந்நாள், முன்னாள் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்

உள்பட கழக உடன்பிறப்புக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

